044-28410259, E-Mail : citutn@gmail.com

# பணத்தட்டுப்பாடு எதிர்ப்பு நடவடிக்கைக்குழு

27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை-600005

## மத்திய அரசின் பண மதிப்பு இழப்பு நடவடிக்கைக்கு எதிராக ஜனவரி 31ல் தமிழகம் முழுவதும் மனித சங்கிலி போராட்டம் !

பணத்தட்டுப்பாடு எதிர்ப்பு நடவடிக்கைக்குழுவின் அமைப்புக்கூட்டம் 13.1.2017 அன்று சென்னையில் தோழர்.க.சாமிநாதன் ( காப்பீடு)அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் அ.சவுந்தரராசன், ஜி.சுகுமாறன்(சிஐடியு), எம்.துரைபாண்டியன் (மத்திய அரசு ஊழியர்), சி.பி.கிருஷ்ணன் (வங்கி), தி.கலைசெல்வி (மாநில அரசு ஊழியர்), டி.செந்தில்குமார்(காப்பீடு), எஸ்.பக்தவச்சலம் (ஆசிரியர்), ஆர்.சேகரன் (வங்கி அதிகாரிகள்), எஸ்.செல்லப்பா,கே.சீனிவாசன்(தொலைதொடர்பு), ஆர்.ஜோதி (அனைத்துத்துறை ஓய்வூதியதாரர்கள்), பாலா (வாலிபர் சங்கம்), உச்சமாகாளி (மாணவர் சங்கம்), பிரமிளா (மாதர் சங்கம்), நம்புராஜன் (மாற்றுதிறனாளி), பி.சண்முகம் (விவசாயிகள் சங்கம்), வி.அமிர்தலிங்கம் (விவசாயி தொழிலாளர் சங்கம்) உள்ளிட்ட அமைப்புகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

இந்தியா முழுமையுமுள்ள உழைப்பாளி மக்களின் வாழ்நிலையில் கடும் பாதிப்புகளை உருவாக்கியுள்ள “ செல்லாப்பண நடவடிக்கை “ யால் ஏற்பட்டுள்ள எதிர்வினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைக்குழுவில் இடம் பெற்றுள்ள அமைப்புகள் தங்களின் சுயேட்சையான இயக்கங்களை நடத்தியிருக்கின்றன. சென்னையிலும், மதுரையிலும் வாலிபர், மாணவர், மாதர் அமைப்புகள் நடத்திய போராட்டத்தில் காவல்துறை கடுமையான அடக்குமுறையை ஏவிவிட்டதையும், சிறையிலடைத்ததையும் மீறி முன்னணி ஊழியர்கள் உறுதியோடு களத்தில் நின்றிருப்பது பாராட்டுதலுக்குரியதாகும். மக்களின் நலனுக்கான போராட்டத்தை ஒடுக்க முனைந்த தமிழக காவல்துறையின் நடவடிக்கைக்கு இக்கூட்டம் கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறது.

செல்லாப்பண நடவடிக்கையின் நோக்கங்களாக மத்திய அரசு கருப்புப்பண ஒழிப்பு, கள்ளப்பண ஒழிப்பு, தீவிரவாத நடவடிக்கைகளுக்கான ஊற்றுக்கண்ணை அடைப்பது, லஞ்ச-ஊழல் தடுப்பு ஆகியனவற்றை அறிவித்தது. ஆனால் கடந்த 65 நாட்களின் அனுபவம் இந்த இலக்குகளை நோக்கிய அறிகுறிகள் எதையும் உணர்த்தவில்லை என்பதே உண்மை.

அரசின் அறிவிக்கப்பட்ட இலக்குகள் ஈடேறவில்லையென்பதோடு இந்நடவடிக்கை இந்திய மக்களின் வாழ்வாதாரத்தைக் கடுமையாக சீரழித்திருக்கிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சரிவு பற்றிய பல மதிப்பீடுகளில் ஒன்று 3 சதவீதத்திற்கும் மேலான சரிவைக் கணித்துள்ளது. சிறு தொழில்கள், சிறு வியாபாரங்கள் பெரும் பாதிப்புக்களுக்கு ஆளாகியுள்ளன. லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழப்புகளுக்கு ஆளாவார்கள் என கணிப்புகள் கூறுகின்றன. கிராமப்புறங்களில் 100 நாள் வேலைத்திட்டம் ஸ்தம்பித்து நிற்கிறது. ஏடிஎம்கள் செயலிழந்தும், வங்கிகளின் வாசல்களில் பெரும் கூட்டங்களும் காணப்படுகின்றன. 115 உயிர்கள் பறிபோயிருக்கின்றன. மிகுந்த இன்னல்களுக்கு மத்தியில் மக்கள் சேவை ஆற்றி வருகிற வங்கி அதிகாரிகள்- ஊழியர்கள், உயிரிழப்புகளும் இதில் அடக்கம்.

‘கறுப்புப்பண ஒழிப்பிலிருந்து’ தனது இலக்கை ‘காசற்ற பொருளாதாரத்திற்கு “ அரசு மாற்றியிருப்பது மக்களின் கவனத்தை திசை திருப்புகிற உத்தி மட்டுமல்ல. பன்னாட்டு நிதி தொழில் நுட்ப நிறுவனங்களின் சந்தை வேட்டைக்கு வழிவகுப்பதாகும்.

அனைத்து தரப்பு மக்களையும் பாதித்துள்ள பணத்தட்டுபாடு நடவடிக்கைக்கு எதிராக சிஐடியு, மத்திய-மாநில அரசு ஊழியர் , ஆசிரியர் , வங்கி, காப்பீடு, தொலைதொடர்பு, விவசாயிகள், விவசாய தொழிலாளர், மாதர், வாலிபர், மாணவர், வழக்கறிஞர், மாற்றுதிறனாளி உள்ளிட்ட அமைப்புகள் இணைந்து பணத்தட்டுபாடு எதிர்ப்பு நடவடிக்கைக்குழு சார்பில் தொடர் போராட்டத்தில் ஈடுபடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

**கோரிக்கைகள்**

1. மக்கள் சொந்தப்பணத்தை எடுக்க எந்த கட்டுப்பாடுகளும் கூடாது
2. காசற்ற பொருளாதாரத்தில் மக்களை கட்டாயப்படுத்தி தள்ளாதே
3. விவசாய வேலைகள் முடங்கியிருப்பதால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயக்கடன்கள் ரத்து
4. கிராமப்புற 100 வேலை திட்ட ஒதுக்கீட்டை இரண்டு மடங்கு ஆக்கு
5. செல்லாப்பண நடவடிக்கையால் உயிரிழந்துள்ள மக்களுக்கு இழப்பீடு
6. பாதிக்கப்பட்டுள்ள சிறு நடுத்தர தொழில்களுக்கு வரிச்சலுகை
7. கூட்டுறவு வங்கிகள் மீதான அதீதக்கட்டுப்பாடுகளில் தளர்வு
8. மாநில அரசுகளுக்கு ஆகிற கூடுதல் செலவினத்தை ஈடுகட்டுதல்
9. வேலை இழந்தவர்களுக்கு இழப்பீடு
10. ஆதார் இணைப்பைக்கட்டாயமாக்கி ரேசன் அளிப்பை நிறுத்தாதே

**இயக்கங்கள்**

- ஜனவரி 29, 30,31 ஆகிய மூன்று நாட்கள் பிரச்சார இயக்கம்
- ஜனவரி 27 அன்று தொழிலகங்கள், அலுவலகங்கள் முன்பு வாயிற்கூட்டங்கள் நடத்துவது
- காலை 9 மணி முதல் 1 மணி வரை அனைத்து தாலூகா மையங்களில் இல்லம் தோறும் துண்டுப்பிரசுரங்களோடு மக்களை சந்திப்பது
- மாலை 4.00 மணி முதல் 9.00 மணி வரை வேன் பிரச்சாரம் அல்லது ஆட்டோ மைக் பிரச்சாரம் ( தாலூகா மையங்களில் ஜனவரி 29,30)
- இதற்கான மாவட்ட அளவிலான தயாரிப்புக்கூட்டங்களை ஜனவரி 19க்குள் நடத்துவது,
- சென்னையில் ஜனவரி 25 - பத்திரிகையாளர் சந்திப்பு கூட்டத்தை நடத்துவது
- ஜனவரி 31 அன்று மாலையில் மாவட்ட தலைநகரங்களில் மாவட்டம் முழுமையுமான திரட்டலோடு “ மனித சங்கிலி” நடத்துவது - மனித சங்கிலியில் வணிகர் அமைப்புகள், குடியிருப்பு நல சங்கங்கள் போன்ற அமைப்புகளுக்கு அழைப்பு விடுப்பது என்று திட்டமிடப்பட்டது.

தோழமையுள்ள

**(ஜி.சுகுமாறன்)**
பொதுச்செயலாளர்
சிஐடியு, தமிழ் மாநிலக்குழு

**பணத்தட்டுப்பாடு எதிர்ப்பு நடவடிக்கைக்குழுவில் அங்கம் வகிக்கும் அமைப்புகள்**

1) இந்திய தொழிற்சங்க மையம் (சிஐடியு)
2) மத்திய அரசு ஊழியர் மகா சம்மேளனம்
3) தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
4) இந்திய வங்கி ஊழியர் சங்கம்
5) அகில இந்திய காப்பீட்டு ஊழியர் சங்கம்
6) பிஎஸ்என்எல் எம்பாளயீஸ் யூனியன்-தமிழ்நாடு
7) அகில இந்திய வங்கி அதிகாரிகள் சம்மேளனம்
8) அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம்
9) இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம்
10) இந்திய மாணவர் சங்கம்
11) தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்
12) அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கம்
13) அகில இந்திய வழக்கறிஞர்கள் சங்கம்
14) தமிழ்நாடு அனைத்து வகை மாற்று திறானளிகள் மற்றும் பாதுகாப்போர் மற்றும் உரிமைக்களுக்கான சங்கம்
15) தமிழ்நாடு அறிவியல் இயக்கம்
16) தமிழ்நாடு அனைத்துத்துறை ஓய்வூதியதாரர்கள் சங்கம்
17) தமிழ்நாடு அரசு போக்குவரத்து ஓய்வூதியதார்கள் சங்கம்
18) தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பு
19) தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி
20) தமிழ்நாடு ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி
21) தமிழ்நாடு மேல்நிலைபள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்கம்
22) தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் சங்கம்
23) தமிழ்நாடு இடைநிலை ஆசிரியர் சங்கம்

--------